**செய்தி வெளியீடு எண் : 1445** **நாள் : 22.08.2022**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாநிலக் கல்விக்கொள்கை-உயர்மட்டக் குழு</u>

தமிழ்நாட்டில் தனித்துவமான (Distinct) மாநில கல்விக்கொள்கை வகுக்கும் நோக்கில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு, அரசாணை (நிலை) எண். 98 பள்ளிக்கல்வித் (வரவு செலவு-2) துறை, நாள். 01.06.2022ன் படி மாண்புமிகு நீதியரசர் (ஓய்வு) திரு.த.முருகேசன், முன்னாள் புதுதில்லி உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக்குழு அமைத்து ஆணையிட்டுள்ளது.

மாநிலக் கல்விக் கொள்கை சம்மந்தமாக பொதுமக்கள் | கல்வியாளர்கள் /தன்னார்வலர்கள் | தொண்டு நிறுவனங்கள் / ஆசிரியர்கள் | ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் / மாணவர்கள் | பெற்றோர்கள் / தனியார் கல்வி நிறுவனத்தைச்சார்ந்தவர்கள் ஆகியோரிடமிருந்து கருத்துருக்கள் மற்றும் ஆலோசனைகள் கீழ்க்கண்ட மின்னஞ்சல் அல்லது அலுவலக முகவரிக்கு 15.09.2022ஆம் தேதி வரை அனுப்பிவைக்கலாம் என 14.07.2022 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் பத்திரிக்கை செய்தி வெளியிடப்பட்டது. மாநிலக் கல்விக் கொள்கைக்குழு மேலும் கூடுதலாக ஒரு மாத காலம் நீட்டித்து 15.10.2022 ஆம் தேதி வரை கருத்துருக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற முடிவு செய்து அவ்வாறே கால நீட்டிப்பு வழங்கப்படுகிறது.

**மின்னஞ்சல் முகவரி** : stateeducationpolicy@gmail.com

**<u>அலுவலக முகவரி</u>** :

**Centre for Excellence Building. 3வது தளம்,**

**களஞ்சியம் கட்டிடம் பின்புறம்,**

**அண்ணா பல்கலைக்கழகம்,**

**சென்னை -600025.**

மேலும் கருத்துருக்கள்/ ஆலோசனைகள் பெறும் பொருட்டு மண்டல அளவில் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்திட மாநில கல்விக் கொள்கை உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மண்டலவாரியாக கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம்</u>

| வ.எண். | மண்டலம் | மாவட்டங்கள் | கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி<br>தென்காசி | 20.09.2022<br>(வியாழக்கிழமை)<br>காலை 10.30மணி முதல் | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருநெல்வேலி |
| 2 | மதுரை | மதுரை தேனி<br>திண்டுக்கல்<br>சிவகங்கை<br>இராமநாதபுரம்<br>விருதுநகர் | 21.09.2022<br>(வெள்ளிக்கிழமை)<br>காலை 10.30மணி முதல் | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>மதுரை |
| 3 | திருவாரூர் | தஞ்சாவூர்<br>திருவாரூர்<br>நாகப்பட்டினம்<br>மயிலாடுதுறை | 3வது வாரம்,<br>அக்டோபர் 2022 | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருவாரூர் |
| 4 | திருச்சி | திருச்சி<br>கரூர்<br>புதுக்கோட்டை<br>பெரம்பலூர்<br>அரியலூர் | 3வது வாரம்,<br>அக்டோபர் 2022 | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருச்சி |

மேலும் இதர மண்டலங்களிலும் படிப்படியாக கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது

உறுப்பினர் செயலர்,
மாநிலக் கல்விக்கொள்கை-உயர்மட்டக் குழு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in